# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்**:143 **தேதி**:-03.12.2016

## நிர்வாகத்துடன் மத்திய சங்கம் சந்திப்பு மற்றும் ஜியோவின் சலுகை நீட்டிப்பும்

அன்பார்ந்த தோழர்களே,

02.12.2016 அன்று BSNL ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் BSNL CMD திரு அனுபம் ஸ்ரீவாஸ்தவா அவர்களை சந்தித்து கேரள மாநிலத்தின் மீதமுள்ள பழி வாங்குதல்களையும் விசாரணை அதிகாரியின் கண்டு பிடிப்புகளின் அடிப்படையில் ரத்து செய்ய வேண்டும் என்றும் மேற்கு வங்க தலைமை பொது மேலாளர் தனது முழு நேர பணியாக BSNL ஊழியர் சங்கத்தை உடைப்பதை மட்டுமே செய்து வருவதால் வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்பட்டிருபதையும் எடுத்துக் கூறினார். இவற்றை ஏற்றுக் கொண்ட CMD அவற்றை கவனிப்பதாக உறுதி அளித்துள்ளார்.

GM(Estt) திருமிகு மது அரோரா அவர்களை சந்தித்த நமது பொதுச் செயலாளர் TT மற்றும் JE பதவிகளுக்கான இலாகா தேர்வுகளை 2017 துவக்கத்திலேயே நடத்த வேண்டும் என வலியுறுத்தினார். இந்த பிரச்சனையில் தேவையானவற்றை செய்வதாக அவர் உறுதி அளித்துள்ளார்.மேலும் BSNLல் இணைக்கப்படாத ஊழியர்களுக்கு 7வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்த வேண்டும் என மீண்டும் வலியுறுத்தினார். இதற்கான உத்தரவுகள் விரைவில் வெளியிட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவித்து உள்ளார்.

GM(Admn) பொறுப்புகளையும் கூடுதலாக கவனித்து வரும் GM(SR) திரு A.M. குப்தா அவர்களை சந்தித்த நமது பொதுச் செயலாளர் தோழர் P.அபிமன்யு, ERP அமலாக்கப்பட்டதற்கு பின் மத்திய சங்கத்திற்கு பகுதிப்பணம் முறையாக வருவதில்லை. அதனை மாநில நிர்வாகங்கள் சரிவர செய்வதில்லை என்கின்ற பிரச்சனையை அவருடன் விவாதித்தார். இதனை முறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அவர் உறுதி அளித்துள்ளார்.

மேலும் BSNLன் அகில இந்திய இறகுப்பந்து போட்டி திருவனந்தபுரத்தில் டிசம்பர் 14 முதல் 17 வரை நட்த்த திட்டமிடப்பட்டுள்ளது. டிசம்பர் 15 வேலை நிறுத்தம் நடைபெற உள்ளதால், அந்த போட்டியினை தள்ளி வைக்க கேட்டுக் கொண்டார். அதனையும் பரிசீலிக்க அவர் ஏற்றுக் கொண்டார்.

**ரிலையன்ஸ் ஜியோ தனது இலவசங்களை மார்ச் 31 வரை நீடிக்க முடிவு:-** ரிலையன்ஸ் ஜியோ, தனது இலவச திட்டங்களை மார்ச் 31 வரை நீட்டித்துள்ளதாக 02.12.2016 அன்று அதன் தலைவர் முகேஷ் அம்பானி அறிவித்துள்ளார். இதன் காரணமாக ஏர்டெல், வோடோபோன் மற்றும் ஐடியா ஆகிய நிறுவன்ங்களின் பங்குகள் கடுமையாக சரிந்துள்ளன. இந்திய தொலை தொடர்பு சந்தையை தனது கொழுத்த பண பலத்தால் கைப்பற்ற முகேஷ் அம்பானி முயல்கின்றார். தற்போது BSNL உள்ளிட்ட இதர நிறுவனங்களும் இதே போன்ற சலுகைகளை வழங்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளன. இது அவர்களின் வருவாயை பாதிக்கும்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

(A.பாபு ராதாகிருஷ்ணன்)
மாநில செயலாளர்